# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2021

## வளர் தமிழ் 4

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 120 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 05 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 10 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. ங் என்ற எழுத்து ________________ .
   ( உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து )

2. திருமலைக்கடலில் வந்து கலக்கும் ஆறு ________________ .
   ( மகாவலி, பாலாவி, களனி )

3. வாழ்க்கை வழிகாட்டி எனக் கூறப்படும் நூல் ________________ .
   ( புறநானூறு, தொல்காப்பியம், திருக்குறள் )

4. குதிரை வண்டி கற்பாதையில் ________________ என்று ஓடியது.
   ( கடகட, மடமட, படபட )

5. உண்மையான நண்பர்களின் நட்பே நமக்கு ________________த் தரும்.
   ( உயர்வை, தாழ்வை, தீமையை )

6. ஆசிரியர் ________________ அழைத்தார்.
   ( மாணவனை, மாணவனுக்கு, மாணவனால் )

7. அவன் நேற்று நூலகத்தில் நூல்கள் ________________ .
   ( எடுத்தேன், எடுத்தான், எடுத்தோம் )

8. தொன்மையும் சிறப்பும் உடைய தோற்கருவி ________________ .
   ( உடுக்கு, பறை, மேளம் )

9. கிளித்தட்டில் மறிக்கும் கன்னையின் தலைவரை ____________ என்று அழைப்பர்.

( கிளி, புறா, காகம் )

10. **குறள்:**

ஆங்க அமைவு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
வேந்துஅமைவு இல்லாத ________________ .

( வீடு, காடு, நாடு )

11. எல்லாளன் கட்டிய குளம் ________________ .

( மாங்குளம், வவுனிக்குளம், சேந்தாங்குளம் )

12. யாழிசைப்போர் ________________ என அழைக்கப்பட்டனர்.

( வேடர், கூத்தர், பாணர் )

13. ஈழவனால் சிற்பம் ________________ .

( செதுக்கப்பட்டது, செதுக்கினான், செதுக்குவான் )

14. கப்பல்கள் தரித்து நிற்கும் இடம் ________________ என அழைக்கப்படும்.

( பட்டினம், துறைமுகம், கால்வாய் )

15. மாலைப்பொழுது என்பதைப் பிரித்து எழுதினால் ____________ .

( மாலைப்+பொழுது, மாலை+பொழுது, மாலைய்+பொழுது )

16. காகம் கரையும். அது போல நரி ________________ .

( கூவும், கத்தும், ஊளையிடும் )

17. திருகோணமலை இலங்கையின் ______________ த் திக்கில் அமைந்துள்ளது.

( கிழக்கு, மேற்கு, வடக்கு )

18. ஓட்டுயிரிக்கு ஓர் எடுத்துக்காட்டு ________________ .

( மீன், கணவாய், நண்டு )

19. ________________ கண்ணகிக்குச் சிலை வடித்தான்.

( நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன், இளங்கோ )

20. உண்மை என்பதன் எதிர்ச்சொல் ______________.

( பகல், பொய், பகை )

21. **நொடி:**

இரவெல்லாம் பூங்காடு பகலெல்லாம் வெறுங்காடு அது என்ன? ________________

( முற்றம், வானம், நிலம் )

22. ________________ கவிதை வாசித்தாள்.

( அவள், நான், அவன் )

23. அரங்கம் என்பது ______________ .
( வயல், மேடை, மழை )

24. முத்தமிழில் ஒன்று ______________ .
( இசை, ஓவியம், நடனம் )

25. 80 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ______________ .
( எண்பது, என்பது, எம்பது )

26. நீ ______________ பாடத்தை மட்டும் படி!
( தனது, எனது, உனது )

27. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல் ______________ .
( சிலந்தி, எறும்பு, ஒட்டகம் )

28. குயிலி ______________ எனச் சிரித்தாள்.
( மளமள, சலசல, கலகல )

29. வருகின்ற சனிக்கிழமை தமிழ்த்திறன் போட்டி ______________ .
( நடைபெறும், நடைபெற்றது, நடைபெறுகின்றது )

30. நல்ல பண்புள்ள மாந்தனை உருவாக்குவது ______________ .
( நாடு , குடும்பம், உலகம் )

புள்ளிகள் 30

## 2) கீறிட்ட இடத்தை மிகப்பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| சுடச்சுட | மதமத | விடியவிடிய |
|---|---|---|
| கிடுகிடு | இன்பதுன்பம் | |

1. முன்னாளில் கூத்துகள் ____________________ நடைபெறும்.

2. எமது வாழ்க்கையில் ____________________ மாறிமாறி வரும்.

3. நிலநடுக்கத்தினால் கட்டடங்கள் ____________________ என்று ஆடின.

4. வாழைக்கன்று ____________________ எனச் செழித்து வளர்ந்தது.

5. அப்பா தேநீரைச் ____________________ க் குடித்தார்.

புள்ளிகள் 05

**3) பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. நாம் என்றும் ஒற்றுமையாக வாழ ______________________ .

2. தூயவன் ஒலிம்பிக் போட்டியில் வெற்றி ______________________ .

3. சோமசுந்தரப்புலவர் நவாலியில் ______________________ .

4. வாத்துகள் குளத்தில் ______________________ .

5. அறிஞருடன் சேர்ந்தால் நல்ல அறிவைப் ______________________.

புள்ளிகள் 10

## 4) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. பறவைகளின் ________________ கூர்மையானவை.

( அலகுகள், அழகுகள் )

2. குயிலி வயிற்று ________________ அழுதாள்.

( வளியால், வலியால் )

3. நாம் சத்துள்ள ________________ உண்ண வேண்டும்.

( உனவை, உணவை )

4. சிறுவர்கள் ________________ பட்டம் விட்டு விளையாடினர்.

( கடற்கறையில், கடற்கரையில் )

5. ________________ பூக்களில் தேன் குடிக்கின்றன.

( வண்டுகள், வன்டுகள் )

புள்ளிகள் 05

**5) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

பறவைகள் பல வண்ணங்களில் காணப்படும். பறவைகள் ஒன்று சேர்ந்து வானத்தில் பறக்கும்போது அழகான கோலம் போன்று காட்சியளிக்கும். பறவைகளின் ஒலி கேட்பதற்கு இனிய இசை போன்று இருக்கும். மிகவும் உயரத்தில் பறக்கும் பறவை பருந்து. கழுகு மிகவும் விரைவாகப் பறக்கும் பறவையாகும். மயில், கிளி போன்றன அழகான பறவைகளாகும். ஆண்மயிலுக்கு அழகிய தோகை உண்டு. தமிழீழத்தின் தேசியப் பறவை செண்பகம்.

1. பறவைகளின் ஒலி கேட்பதற்கு எப்படி இருக்கும்?

_______________________________________________

2. மிகவும் உயரத்தில் பறக்கும் பறவை எது?

_______________________________________________

3. மிகவும் விரைவாகப் பறக்கும் பறவை எது?

_______________________________________________

4. எதற்கு அழகிய தோகை உண்டு?

_______________________________________________

5. தமிழீழத்தின் தேசியப் பறவை எது?

_______________________________________________

புள்ளிகள் 10

**6) மிகப் பொருத்தமான சொற்களைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| வழிகாட்டி | அறிவுரைகளை | ஆசிரியரே |
| நினைவில் | எமக்கு | |

ஆசிரியர் ஒரு சிறந்த ________________ .பெற்றோருக்கு அடுத்ததாக ________________ எங்கள் வாழ்க்கையில் அகத்தியமானவர். ஏனெனில், எங்கள் எதிர்காலத்தை வளப்படுத்துவதில் அவரின் பங்கு அளப்பரியது. ஆசிரியர் ________________ நல்லவற்றையே சொல்லித் தருவார். ஆகையால், அவர் சொல்லித் தரும் ________________ மனத்தில் கொள்வோம். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்னும் பழமொழியை ________________ வைத்து நடப்போம்.

புள்ளிகள் 10

## 7) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. நீரை எத்தனை வகையாகப் பிரிப்பர் ?

2. மருந்தாகப் பயன்படும் பலசரக்கு ஒன்று தருக.

3. தாமோதரம்பிள்ளை பிறந்த ஊர் எது?

4. அரசன் கொடை வழங்கும் போது ஒலிக்கும் முரசு எது?

5. வீணைக்கொடியோன் எனப் போற்றப்பட்ட மன்னன் யார் ?

புள்ளிகள் 10

8) தரப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளைக் கட்டங்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| மீ | ன் | தொ | ட் | டி |
| ஆ | | | கா | ளை |
| வ | சே | வ | ல் | |
| ணி | க | ண் | ணா | டி |

1. காலையில் கூவுவது ______________ .

2. மாதங்களில் ஒன்று ______________ .

3. முகம் பார்க்க உதவுவது ______________ .

4. மீன்களை வளர்க்கப் பயன்படுவது ______________ .

5. வயலை உழுவதற்குப் பயன்படும் விலங்கு ______________ .

புள்ளிகள் 05

9) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதையைத் தொடர்ந்து எழுதுக.



புள்ளிகள் 15

ஒருநாள் சிறுமி தன் நாய்க்குட்டியுடன் வெளியே சென்று கொண்டிருந்தாள். அப்பொழுது .......

TEDC